

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 140 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – மார்கழி 14 – ஞாயிற்றுக்கிழமை 29 டிசம்பர் 2024 – கோவை ★★ 16 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 140: Thiruvalluvar Year - 2055 - Margazhi 14 - Sunday 29 December 2024 - Kovai ★★ 16 Pages ₹ 5.00




புதுடெல்லியில், உடல்நலக் குறைவால் மறைவெய்திய முன்னாள் இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களின் இல்லத்திற்கு – தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.12.2024) நேரில் சென்று, அவரது உடலுக்கு மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர். பாலு, கனிமொழி கருணாநிதி, தயாநிதிமாறன், ஆ. ராசா, திருச்சி சிவா, தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன் ஆகியோர் உள்ளனர்.

# முன்னாள் பிரதமர் - டாக்டர் மன்மோகன்சிங் மறைவு!

# முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் அஞ்சலி!

## ‘தமிழ்நாட்டின் கோரிக்கைகளை கனிவுடன் பரிசீலித்து அனுமதி வழங்கியவர்’ என புகழாரம்!



முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் அவர்களுடன் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்!

புதுடெல்லி, டிச.29 -

**கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் புதுடெல்லி சென்று, முன்னாள் பிரதமர் - பொருளாதார மேதை, மறைந்த மன்மோகன்சிங் அவர்களின் திருவுடலுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். மன்மோகன்சிங் அவர்களின் துணைவியார் மற்றும் குடும்பத்தினருக்கு, தமது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொண்டார்.**

**பின்னர் தம்மைச் சந்தித்த செய்தியாளர்களிடம் பேசிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “தமிழ்நாட்டின் கோரிக்கைகளை கனிவுடன் பரிசீலித்து அனுமதி வழங்கியவர் மன்மோகன்சிங் அவர்கள்!” என்று புகழாரம் சூட்டினார்.**

முத்தமிழறிஞர் கலைஞர், கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆகியோர் மீது மிகவும் பற்றும் பாசமும் கொண்டவர் மன்மோகன் சிங் அவர்கள். அவரது தலைமையிலான 10 ஆண்டு கால ஆட்சியில் தமிழகத்தில் எண்ணற்ற திட்டங்களைச் செயல்படுத்தியவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் கோரிக்கை வைத்ததும் முன்னின்று அதனை நிறைவேற்றிக் கொடுத்த பெருமை மன்மோகன் சிங் அவர்களையே சாரும்.

### பிரதமர்

மன்மோகன் சிங் 2004 முதல் 2014 வரை காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி (யுபிஏ) அரசாங்கத்தின் பிரதமராக இருந்தார். 13வது இந்தியப் பிரதமராகப் பதவி வகித்த அவர், தொடர்ந்து இரண்டு முறை பிரதமராக பணியாற்றினார்.

மன்மோகன் சிங் அவர்கள், பிரதமராவதற்கு முன்பு 1991-ஆம் ஆண்டு பி.வி. நரசிம்மராவ் அரசில் நிதி அமைச்சராக இருந்தார். அப்போது அவரது செயல்பாடுகள் காரணமாக இந்தியாவின் பொருளாதாரத்தின் சிற்பிகளில் ஒருவராகப் போற்றப்பட்டார்.

### வாழ்க்கைக் குறிப்பு:

1932ஆம் ஆண்டு செப்டம்பர் 26ஆம் தேதி, பிரிட்டிஷ் இந்தியாவின் பஞ்சாப் மாகாணத்தில் உள்ள கா என்ற கிராமத்தில் பிறந்தார். (அது இப்போது பாகிஸ்தானில் உள்ளது.) 1947இல் இந்தியப் பிரிவினைக்குப் பிறகு, அவரது குடும்பம் இந்தியாவிற்குக் குடிபெயர்ந்தது. இளமைப் பருவத்திலேயே மன்மோகன் சிங் கல்வியில் சிறந்து விளங்கினார். சண்டிகரில் உள்ள பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் முதல் வகுப்பு பட்டம் பெற்றார்.

பின்னர் அவர் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் முதுகலைப் படிப்பைத் தொடர்ந்தார். 1957இல் பொருளாதாரத்தில் பட்டம் பெற்றார். 1962 இல் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் DPhil பட்டம் பெற்றார். ஏப்ரல் 2024இல் தான் மாநிலங்களவை உறுப்பினர் பதவியில் இருந்து ஓய்வுபெற்றார்.

அரசியலுக்கு வருவதற்கு முன்பாக, பஞ்சாப் பல்கலைக்கழகம் மற்றும் டெல்லி ஸ்கூல் ஆஃப் எகனாமிக்ஸ் ஆகியவற்றில் பேராசிரியராக பணியாற்றினார். 1972 முதல் 1976 வரை தலைமைப் பொருளாதார ஆலோசகர் உள்பட பல முக்கிய பதவிகளை வகித்தார்.

1982 முதல் 1985 வரை இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநராக இருந்தார். அப்போது இந்தியப் பொருளாதாரத்தை வலிமைப்படுத்தல் மற்றும் நிதி ஒழுங்குமுறையில் கவனம் செலுத்தினார். 1985 முதல் 1987 வரை திட்டக் கமிஷனின் துணைத் தலைவராகவும் பணியாற்றினார்.



புதுடெல்லியில், உடல்நலக் குறைவால் மறைவெய்திய முன்னாள் இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களின் இல்லத்திற்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.12.2024) நேரில் சென்று, அவரது உடலுக்கு மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.பாலு, கனிமொழி கருணாநிதி, தயாநிதிமாறன், ஆ.ராசா, திருச்சி சிவா, தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன் ஆகியோர் உள்ளனர்.

### மன்மோகன்சிங் மறைவு: 7 நாட்கள் துக்கம் அனுசரிப்பு! தேசியக் கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டது!

முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் அவர்கள் மறைவையொட்டி தமிழ்நாட்டில் 7 நாட்கள் துக்கம் அனுசரிக்கப்படுகிறது. தேசியக் கொடி அரைக்கம்பத்தில் பறக்க விடப்பட்டுள்ளது.

முன்னாள் பிரதமர் மன்மோகன்சிங்கிற்கு அஞ்சலி செலுத்தும் வகையில் நாடு முழுவதும் 7 நாட்கள் துக்கம் அனுசரிக்கப்படும் என்று ஒன்றிய அரசு அறிவித்துள்ளது. மன்மோகன்சிங்கிற்கு அஞ்சலி செலுத்தும் வகையில் தமிழ்நாட்டிலும் 7 நாட்கள் துக்கம் அனுசரிக்கப்படுகிறது.

சென்னை தலைமைச் செயலகத்தில் தேசியக்கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டுள்ளது. இதேபோல் நீதிமன்றங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகங்கள் மற்றும் அரசு அலுவலகங்களிலும் தேசிய கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டுள்ளது.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி!

புதுடெல்லியில் மன்மோகன் சிங் அவர்களின் உடலுக்கு மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்திய பின்னர் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:-

பொருளாதார நிபுணர், முன்னாள் இந்திய பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களின் இழப்பானது காங்கிரஸ் பேரியக்கத்திற்கு மட்டுமல்ல, இந்திய நாட்டிற்கே மிகப்பெரிய இழப்பாகும். குறிப்பாக தமிழ்நாட்டினுடைய உட்கட்டமைப்பு வசதிகளைப் பெருக்குவதற்கும், பல்வேறு திட்டங்களை உருவாக்கித் தருவதற்கும் துணை நின்றிருக்கிறார்.

குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், மதுரவாயல் பறக்கும் சாலைத் திட்டமாக இருந்தாலும், தமிழகத்தில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கக்கூடிய வகையிலே சாலைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதாக இருந்தாலும் சரி, அதேபோல் 100 நாட்கள் வேலைத்திட்டம் என்கின்ற ஒரு புரட்சிகரமான திட்டத்தை கொண்டு வந்து அறிமுகப் படுத்தியவர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள்.

எல்லாவற்றையும் தாண்டி, தமிழர்களுடைய பல ஆண்டு கால கனவாக இருந்து வந்த தமிழ் மொழிக்கு செம்மொழி அந்தஸ்தை அன்னை சோனியா காந்தி அவர்களின் துணையோடு அறிவித்து நிறைவேற்றித் தந்தவர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்கள். தலைவர் கலைஞர் அவர்களோடு நெருங்கி நட்புணர்வோடு பழகக்கூடியவராக இருந்தவர். அவர் மறைந்துவிட்டார் என்பது வேதனைக்குரிய ஒன்று.

அவரை இழந்து வாடும் அவருடைய குடும்பத்தாருக்கும், காங்கிரஸ் பேரியக்கத்திற்கும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்.

**செய்தியாளர்:** - பத்து ஆண்டுகள் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் பிரதமராக இருந்தபோது திராவிட முன்னேற்றக் கழகமும் அந்த கூட்டணியில் இருந்தது. தமிழ்நாட்டிற்கு எவ்வளவு நன்மையாக இருந்தது?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்** - இன்றைக்கு மெட்ரோ இரயில் திட்டம் தமிழ்நாட்டிற்கு வந்திருக்கிறது என்றால், அதற்கு காரணம் அவர் தான். கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் கொண்டு வந்ததற்கும் அவர் தான் காரணம். அதேபோல், சேது சமுத்திரத் திட்டத்தைக் கொண்டு வருவதற்கும் அவர் தான் காரணமாக இருந்தார். ஆனால் இடையிலே அத்திட்டம் நின்றுவிட்டது. இதுபோன்ற பல்வேறு திட்டங்கள் தமிழ்நாட்டிற்கு வருவதற்கு அவர் தான் காரணமாக இருந்திருக்கிறார்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் பேட்டியளித்தார்.

---

### தமது தொலைநோக்கால்

# நாட்டையே சீரமைத்த அரிதான தலைவர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

புதுடெல்லி, டிச. 29 -

முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களின் உடலுக்கு அஞ்சலி செலுத்திய பின் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது சமூக வலைதளப் பதிவில், “தமது தொலைநோக்கால் நாட்டையே சீரமைத்த அரிதான தலைவர்களுள் ஒருவராகத் திகழ்ந்தவர்” என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

முதல்வர் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**இந்தியாவின் தலைசிறந்த மகன்களுள் ஒருவரான டாக்டர் மன்மோகன் சிங் அவர்களுக்கு எனது இறுதி மரியாதையைச் செலுத்தினேன்.**

**வரலாறு அவரை கனிவுடன் நடத்தும் என்பது மட்டுமல்ல, தமது தொலைநோக்கால் ஒரு நாட்டையே மறுசீரமைத்த, தமது பணிவால் கோடிக் கணக்கானோருக்கு ஊக்கமூட்டிய, அடுத்து வரும் தலைமுறைகளுக்கெல்லாம் தமது வாழ்க்கையால் நம்பிக்கை மற்றும் வளர்ச்சிக்கான கலங்கரை விளக்கமாக விளங்கும் அரிதினும் அரிதான தலைவர்களுள் ஒருவராக வரலாறு அவரது பெயரைப் பொறித்து வைக்கும்.**

இவ்வாறு முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.